Manju. P
Vasanthi. E

இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் — Dr. க. பஞ்சாங்கம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை - கோட்பாடுகளின் தேவை | 7 - 11 |
| 1. இலக்கியக் கோட்பாடு - இலக்கியத் திறனாய்வு - இலக்கிய வரலாறு | 13 - 19 |
| 2. புதுத் திறனாய்வு | 20 - 43 |
| 3. வரலாற்றியல் திறனாய்வு | 44 - 62 |
| 4. மொழியியல் திறனாய்வு | 63 - 74 |
| 5. ஒப்பிலக்கியத் திறனாய்வு | 75 - 91 |
| 6. சமூகவியல் திறனாய்வு | 92 - 106 |
| 7. மார்க்சியத் திறனாய்வு | 107 - 127 |
| 8. உளப்பகுப்பாய்வுத் திறனாய்வு | 128 - 150 |
| 9. தொன்மத் திறனாய்வு | 151 - 162 |
| 10. அமைப்பியல் - பின்-அமைப்பியல் - சிதைவாக்கத் திறனாய்வு | 162 - 191 |
| 11. எடுத்துரைப்பியல் திறனாய்வு | 192 - 201 |
| 12. பின்-நவீனத்துவத் திறனாய்வு | 202 - 215 |
| 13. பெண்ணியத் திறனாய்வு | 216 - 243 |
| 14. தலித் இலக்கியத் திறனாய்வு | 244 - 260 |
| 15. பின்காலனித்துவத் திறனாய்வு | 261 - 343 |
| 16. புலம்பெயர் இலக்கியத் திறனாய்வு | 344 - 351 |
| 17. சூழலியல் திறனாய்வு | 352 - 362 |
| துணைநூற்பட்டியல் | 363 - 367 |

S.Kmani. I-Unit

# 1. இலக்கியக் கோட்பாடு-இலக்கியத் திறனாய்வு-இலக்கிய வரலாறு

## முன்னுரை

இலக்கியக் கோட்பாடு, இலக்கியத் திறனாய்வு என்பன அந்தந்தக் காலத்தின் தேவைக்கும் சமூக அரசியலுக்கும் ஏற்ப அமைவனவாகும். தமிழில் தொன்மையான தொல்காப்பியர் தொடங்கி இடைக்கால உரையாசிரியர்கள் வரை, திறனாய்வு முறை என ஒன்று சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது. இந்நூலில் காலனித்துவ ஆட்சி உருவாகி ஆங்கிலக் கல்வி அறிமுகமானதன் விளைவாகத் தமிழில் தோன்றிய ஆங்கில மொழி வழிப்பட்ட திறனாய்வுக் கோட்பாடுகள் விரிவாக விளக்கப்படுகின்றன. இந்த முதல் கட்டுரையில் இலக்கியக் கோட்பாடு, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு ஆகிய மூன்றுக்குமான உறவு நிலைகளை விளக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதன் மூலம் இலக்கியக் கல்வியில் திறனாய்வு பெறும் இன்றியமையாத இடத்தை அடையாளம் கண்டுகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

இலக்கியக் கோட்பாடு, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு ஆகிய இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்து இயங்கக் கூடியவை. இந்தச் சார்பு நிலைகளை விளக்குவதன் மூலமாகவும் இலக்கியத் திறனாய்வு என்பதை இன்னும் கூடுதலாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்ற நோக்கில்தான் இங்கே இவைகள் விளக்கத்திற்கு உள்ளாகின்றன.

பழங்காலத்தில் இம்மூன்றும் ஒரே துறையாகவே இயங்கியுள்ளன. அரிஸ்டாட்டிலின் கவிதையியலும், தொல்காப்பியரின் பொருளதிகாரமும் இதற்குச் சரியான சான்று. இருபதாம் நூற்றாண்டில்தான் அறிவியல்

வளர்ச்சியின் விளைவாகத் துல்லியமாகத் தேடுதல் என்ற நோக்கிற்கு ஏற்ப ஒவ்வொன்றையும் பல்வேறு துறைகளாகப் பிரித்தறியும் மனப்பான்மை தோன்றியது. எனவேதான் இன்றைய இலக்கியக் கல்வியில் இம்மூன்றும் தனித்தனிப் பிரிவாக அறியப்படுகின்றன. ஆனால் உண்மையில் ரெனிவெல்லாக் மற்றும் ஆஸ்டின் வாரன் கூறுவது போல,

> "இம்மூன்றில் ஒன்றினை மற்ற இரண்டின் துணைஇன்றி அறியமுடியாது'

என்பதுதான் உண்மை. எனவே இலக்கியத் திறனாய்வை முழுமையாகப் புரிந்துகொள்ள இலக்கியக் கோட்பாடுகளையும் இலக்கிய வரலாற்றையும் கற்றுத் தெளிய வேண்டும்.

## இலக்கியக் கோட்பாடு

ஆங்கிலத்தில் வழங்கப்படும் 'தியரி' (Theory) என்ற சொல்லுக்குத் தமிழில் கொள்கை என்றும், 'டாக்ட்ரீன்' (Doctrine) என்ற சொல்லுக்குக் கோட்பாடு என்றும், 'பிரின்சிபில்' (Principle) என்ற சொல்லுக்கு 'விதி' என்றும் கலைச்சொற்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் தமிழ் இலக்கியத் திறனாய்விலும் சரி, ஆங்கில இலக்கியத் திறனாய்விலும் சரி இச்சொற்களுக்கு இடையே பெரிதும் பொருண்மை வேறுபாடுகளை மேற்கொள்வதில்லை. இலக்கியக் கொள்கை என்றும், இலக்கியக் கோட்பாடு என்றும், இலக்கிய விதிகள் என்றும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற மரபே தமிழில் நிலவி வருகிறது. கொள்கை, கோட்பாடு ஆகிய இரண்டு சொல்லிற்கும் 'கொள்ளுதல்' என்கிற பொருளைத் தரக்கூடிய 'கொள்' என்பதுதான் வேர்ச்சொல்லாகும். இருக்கை, வருகை என்பது போல 'கை' விகுதி சேரும் போது கொள்கை என்றும் இலம்பாடு, வாழ்க்கைப்பாடு என்பது போலப் பாடு விகுதி சேரும்போது கோட்பாடு என்றும் சொல் உருவாகிறது. இவ்வாறு இரண்டிற்கும் ஒரே அடிச்சொல் அமைந்து இருப்பதால்கூடத் தமிழில் இரண்டையும் வேறுபாடு இல்லாமல் பயன்படுத்துகிற போக்கு உருவாகியிருக்கலாம்.

'தியரி' (Theory) என்ற ஆங்கிலச் சொல்லிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி கீழ்க்கண்டவாறு பல சொற்களில் பொருள் தருகிறது.



1. புனைவு
2. புனை கருத்து
3. கருத்தியல் திட்டம்
4. நடைமுறை சார்ந்த கோட்பாட்டுத் திட்டம்
5. தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை
6. ஒருநிலைக் கோட்பாடு
7. மேலாராய்ச்சிக்கு அடிப்படையான யூகக் கோட்பாடு
8. விளக்கக் கோட்பாடு

இதேபோல் 'டாக்ட்ரின்' (Doctrine) என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்டவாறு பொருள் கூறுகிறது.

1. கோட்பாடு
2. வகுத்து அமைத்த கொள்கை
3. விளக்கம்
4. போதனைத் தொகுப்பு
5. சித்தாந்தம்
6. அரசியல், தத்துவக் கோட்பாடு
7. சமய முடிவு விளக்கக் கோட்பாடு
8. அறிவியல் விளக்கக் கோட்பாடு

அதே அகராதி 'பிரின்சிபில்' (Principle) என்ற சொல்லுக்கு இவ்வாறு பொருள் தருகிறது.

1. தத்துவம்
2. அடிப்படை மெய்ம்மை
3. மூலக்கோட்பாடு
4. பொது அமைதி
5. பிறப்பு முதல் தோற்றுவாய்

இவ்வாறு மூன்று சொல்லுக்கும் அகராதி வழங்கும் பொருண்மைகளைப் பார்க்கும் போது இவைகளுக்கிடையே சில பொருள் வேறுபாடுகள் இருக்கின்றன என்பது போல் தெரிகிறது. இப்பொருண்மை வேறுபாடுகளை நாம் கீழ்க்கண்டவாறு விளங்கிக் கொள்ள வாய்ப்பு இருப்பது போல் படுகிறது.

பொதுவான கருத்துக்கள் ஒன்று ஏற்பட்டு நின்று தொடர்கின்ற போது 'கொள்கை' என்றும் அக்கொள்கைக் கூறுகள் தொடர்ந்து நிலைத்து விடும்போது 'கோட்பாடு' என்றும் தொடர்ந்து அது அடிப்படையான மூலக்கூறாக மாறும்போது 'விதி' என்றும் அந்த விதியை மீறுகின்றவர்களுக்குத் தண்டனை என்று வரும்போது 'சட்டம்' (Law) என்றும் வழங்கப்படுகிறது என்பேதான் பேராசிரியர் சிவத்தம்பி கொள்கை, கோட்பாடு என்ற இரண்டு சொற்களையும் பிரித்துக் காட்டி வேறுபடுத்தி விளக்குகிறார்.

"ஒருவரால் ஏற்றுக்கொள்ளப்படும் அபிப்பிராயங்கள், எண்ணக் கருத்துக்கள் ஆகியவற்றைக் கொள்கையெனலாம். தொடர்ந்து குறிப்பிட்ட இலக்கியக் கொள்கை காரணமாக இலக்கியத்தின் உருவிலும் பொருளிலும் ஏற்படும் அமைவுநெறி அல்லது ஒரே சாயலான அமைவுநெறிகளின் தொகுதி ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறி கோட்பாடு என்றும் அழைக்கப்படும்"

என்கிறார். சான்றாகத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"

என்று முன்வைக்கிற இலக்கியக் கருத்துக்களைக் கொள்கையென்றும் இத்தகைய கொள்கைகள் பலவற்றின் தொகுதியாக விளங்குகின்ற தொல்காப்பியத்தைக் 'கோட்பாட்டு நூல்' என்றும் நாம் அழைக்கலாம்.

## இலக்கியக் கோட்பாட்டுக்கும் இலக்கியத் திறனாய்வுக்கும் உள்ள உறவுநிலை

இலக்கியக் கொள்கை உருவாவதற்கு இருவர் காரணமாக அமைகின்றனர். ஒருவர், படைப்பாளி மற்றொருவர், திறனாய்வாளர். படைப்பாளி வாழ்க்கையிலிருந்து தான் படைக்கும் இலக்கியத்தின் மூலமாகக் கொள்கைகளை முன் வைக்கின்றார். திறனாய்வாளர் தான் திறனாயும் இலக்கியம் பற்றிய உணர்பாடல் மூலம் கொள்கைகளை வெளிக்கொணர்கிறார். மேலைநாட்டில் அரிஸ்டாட்டில் தன் கால இலக்கியங்களை எல்லாம் திறனாய்ந்து அவற்றுக்கிடையே காணப்படும் பொதுக் கூறுகளைக் கண்டுபிடித்து அவைகளை இலக்கியக் கொள்கைகளாகக் 'கவிதையியல்' என்ற நூல் மூலம் உலகிற்கு வழங்கியுள்ளார். தமிழ்நாட்டிலும் தொல்காப்பியர் அவ்வாறு 'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி வழக்கையும்,



செய்யுளையும் இணைத்துப் பார்த்துத் திறனாய்ந்து தொல்காப்பியம் என்ற இலக்கியக் கோட்பாட்டு நூலை வகுத்திருக்கிறார் என அவருக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் குறிப்பிடுகிறார். இவ்வாறு இலக்கியக் கொள்கைகள் உருவாவதற்குத் திறனாய்வு ஆதாரமாகிறது. அதேநேரத்தில் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் இலக்கியங்களைத் திறனாய்வு முயலும்போது திறனாய்விற்கு இலக்கியக் கொள்கை ஆதாரமாகிறது. இவ்வாறு இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## இலக்கியக் கொள்கையின் பயன்பாடு

ஓர் இலக்கியத்தை வாசிக்கும் போது அந்த இலக்கியத்திற்கே உரிய கோட்பாட்டை அறிந்து கொண்டு அதற்கேற்ப அதை வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த இலக்கியத்தின் முழுப்பயனையும் அடைய முடியும் என்று ஒரு சாரர் கருதுகின்றனர். மற்றொரு சாரர் இதற்கு நேர்மாறான கருத்தைக் கொண்டிருக்கின்றனர். வாசகர் தன்கோட்பாட்டை முன்வைத்துதான் எந்த ஓர் இலக்கியத்தையும் வாசித்து உணர முயலவேண்டும். அப்பொழுதுதான் எந்த ஒரு பழைய இலக்கியமும்கூட சமகாலத்திற்கு ஏற்றவாறு புதிய பொருளை வழங்கி வரலாற்றில் நிலைத்த தன்மையினை அடைய முடியும் என்கின்றனர். சான்றாகச் சங்க இலக்கியத்தை அதற்குரிய தொல்காப்பிய இலக்கியக் கோட்பாட்டினோடு பொருத்தி வாசித்துத் திறனாய்ந்து மகிழ்வதைவிட இன்றைய மார்க்சியம், பெண்ணியம் முதலிய புதிய இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் அதை விளக்கும் போதுதான் அது இன்றைக்குரிய இலக்கியமாகப் புதுப்புதுக்கோலம் பூண்டு வாழ்வு ஏற்படுகிறது. அதற்கு ஒரு நிரந்தரத் தன்மையும் கிடைக்கிறது. அதேநேரத்தில் தொல்காப்பியத்தைப் பின்பற்றும் வாசிப்பு அறவே தேவையில்லை என்பதல்ல பொருள். அத்தகைய ஒரு வாசிப்புதான் சங்க இலக்கியத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளப் பயன்படும். எனவே இரண்டு வகையான வாசிப்பும் ஓர் இலக்கியத்திற்குத் தேவைதான் எனக் கருதலாம்.

## இலக்கிய வரலாறு

மனிதர்கள் நேற்று, இன்று, நாளை என்ற கால உணர்வுக்குள் வாழ்பவர்கள். அதுவும் சார்லஸ் டார்வினுடைய பரிணாமக் கோட்பாடு சிந்தனை உலகில் பரவிய பிறகு "எந்த ஒன்றிற்கும் வரலாறு இருக்கிறது; தோற்றம், வளர்ச்சி, உச்சம், இறக்கம், முடிவு என்ற வரலாற்றுப் படிநிலைகள்

தவிர்க்க முடியாதவை" என்பன போன்ற பார்வைகள் மனிதர்களின் சிந்தனை முறையிலேயே படிந்து விட்டன. எனவே, இலக்கியத்தையும் கால ஒழுங்குப்படி வரிசையாகத் தொகுத்து அமைத்துக் கொள்வது இலக்கியக் கல்வியின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிப் பழைய ஏட்டிலிருந்து இலக்கியங்களை நூற்களாக அச்சாக்கி வெளியிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், அந்த நூற்கள் தோன்றிய காலத்தைக் கட்டமைத்து, அவைகளை வரிசைப்படுத்துவதில் தமிழ் அறிஞர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதை இந்த இடத்தில் நினைவு கூரலாம். இலக்கியம் தோன்றிய காலம் குறித்த உணர்வு இல்லாமல் இலக்கியத் திறனாய்வோ, இலக்கியக் கொள்கையோ தங்களை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ள முடியாது. இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கை, இலக்கிய வரலாறு ஆகிய மூன்றின் நோக்கமும், செயல் முறையும், பயனும் வெவ்வேறானவை எனக் கருதும் ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன்கூட

> பொதுவாக இலக்கியத் திறனாய்வுக்கும், இலக்கிய வரலாற்றிற்கும் இடையே நிலவும் பிரிவினை, இவ்விருதுறைகளுக்கும் தீமை பயப்பது[3]

என்று எழுதுகின்றனர். அந்த அளவிற்கு இலக்கிய வரலாறு திறனாய்வுத் துறையோடு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறது.

எம்.டபிள்யு.பாட்ரிசன் என்பவர், "இலக்கிய வரலாறு என்பது ஓர் இலக்கியத்தின் காலத்தை மட்டும் ஆராய்வதல்ல. ஓர் இலக்கியத்திலிருந்து மற்றோர் இலக்கியம் எவ்வாறு பிறக்கிறது என்று மரபுத் தொடர்ச்சியையும் விளக்கிக் கூறுவது"[4] என்கின்றார். மேலும் அவர் இலக்கியம் எவ்வாறு பிறந்தது என்று விளக்குவது இலக்கிய வரலாறு என்றும் அந்த இலக்கியம் எவ்வாறு சிறந்தது அல்லது தாழ்ந்தது என்று விளக்குவது இலக்கியத் திறனாய்வு என்றும் தெளிவாக இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார். ஆனாலும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்குத் திறனாய்வுப் புலமையும், இலக்கியத் திறனாய்வாளர்களுக்கு வரலாற்றுப் புலமையும் சேரும் போதுதான் இரண்டுமே சிறக்கும். எனவேதான் ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன் கீழ்க்கண்டவாறு எழுதுகின்றனர்:-

> இலக்கிய வரலாற்று வல்லுநன், வரலாற்று வல்லுநனாக இருப்பதற்காகவாவது ஒரு திறனாய்வாளனாக இருந்தே ஆக வேண்டும்[5]



இவ்வாறு இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கை வகுப்பதிலும் இலக்கிய வரலாறு எழுதுவதிலும் நீக்கமற நிறைந்து விளங்குகிறது. எனவேதான் 'இலக்கியத் திறனாய்வு ஒரு நிறுவனம்' என்று சொல்லும் அளவிற்கு ஆற்றல் வாய்ந்தது என்று டெரி ஈகிள்டன் என்ற புகழ்பெற்ற திறனாய்வாளர் அவருக்கே உரிய கோணத்தில் கீழ்க்கண்டவாறு எழுதிச் செல்லுகிறார்:-

> திறனாய்வு நிறுவனம் தனக்கேயான சொல்லாடலை (Discourse) வடிவமைத்துக் கொண்டு தனது நோக்கமான இலக்கியம் குறித்த மதிப்பீட்டினை, நிறுவனத்திற்குரிய அதிகாரக் குணத்தோடு கட்டமைக்க முயலுகிறது. சொல்லாடல் என்பது குறிப்பிட்ட நோக்கில் மொழியைக் கட்டமைக்கிற ஒரு செயல்பாடுதான். இது அதிகாரச் செயல்பாட்டின் ஒரு குணம். திறனாய்வு அப்படித்தான் இலக்கியத் தளத்தில் அதிகாரமாக இயங்குகிறது. தான் திறனாய்வு செய்யும் படைப்பு குறித்துச் சில குறிப்பான 'வாசகங்களைத்' தேர்ந்தெடுத்துத் தயாரிக்கிறது. அவற்றை வடிவமைக்கிறது. தொடர்ந்து உரையாடுவதன் மூலம் அவற்றை நிலைபெற வைக்கிறது. இவ்வாறு ஓர் அதிகார சக்தியாகத் திறனாய்வு இலக்கிய உலகில் இயங்கிக் கொண்டிருக்கிறது[6]

இவ்வாறு இலக்கியம் குறித்த கல்வியில் திறனாய்வு என்பது தவிர்க்க முடியாத ஒரு துறையாக பெரும் ஆற்றலோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வாழ்விலும் அப்படித்தான். இனிப் பல்வேறு திறனாய்வுக் கோட்பாடுகளின் தன்மைகளை ஒவ்வொன்றாகக் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

1. ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன் (மொ.பு) எஸ்.குளோறியா சுந்தரமதி, 'இலக்கியக் கொள்கை', ப.45.
2. கா.சிவத்தம்பி, 'இலக்கியமும் கருத்துநிலையும்', ப.13.
3. ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன் (மொ.பு) எஸ்.குளோறியா சுந்தரமதி, 'இலக்கியக் கொள்கை', ப.55
4. மே.நூ.ப.45.
5. மே.நூ.ப.54.
6. எடுத்தாளப்பட்டது, தி.சு.நடராசன், 'திறனாய்வுக் கலை', ப.16.